www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு

## கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

25

பெஸ்சூற்றர், பைல் கோட்டை களில் சில பகுதிகள் தகர்க்க ப்பட்டன. ஆனையிறவுக் கோட்டையின் நான்கு கொத்தளங்களும் தகர்க் கப்பட்ட நிலையில் ஆங்கி லேயரின் படைபெருந்திரளாக நெருங்கி வந்தமையால் பண்டார வன்னியன் தன் படை வீரர்க ளுடன் கற்சிலைமடுவுக்கு பின் வாங்க நேர்ந்தது. அதே ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முல்லை த்தீவில் கப்டன் வென்டி றிபேக் அமைத்து வந்த கோட் டையைப் பண்டாரவன்னியன் தாக்கி யுள்ளான். அவனுக்கு உதவி யாக நுகரகலாவியா திசாவையினதும் கண்டி மன்னனதும் படைகள் சென்றுள்ளன. முல்லைத்தீவுத் தாக்குதலில் தோல்வியடைந்த டிறிபேக் தனது வீரர்களுடன் யாழ்ப்பாணத்திற்கு வள்ளங்களில் தப்பியோட நேர்ந்தது. எனினும் திருகோணமலையிலிருந்து ஆங்கிலேயப்படை எட்வேட் மெட்சின் என்பவனின் தலைமையில் முல்லைத்தீவைக் கைப்பற்றிக் கொண்டது.

பண்டாவன்னியனும் அவனுடைய படை வீரர்களும் கோட்டையிலிருந்து மூன்று பீரங்கிகளைக் கைப்பற்றிச் சென்றனர். பண்டார வன்னியனுக்கு உதவி புரிந்தமைக்காக இராசத்துரோக குற்றம் சாட்டப்பட்டு குமாரசேகர முதலியாரும் அவருடைய நண்பர்கள் சிலரும் தூக்கிலிடப்பட்டனர்.

அதன் பிறகும் பண்டாரவன்னியன் ஆங்கிலேயருக்குப் பெருந்தலையிடியாக விளங்கினான். ஆனையிறவுக் கோட்டை இயக்கச்சிகக் கோட்டை என்பன அவன்து தாக்குதலுக்கு உள்ளாகின. அதனால் 1803 அக்டோபர் மாதம் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு படையணி ஜோன்யுவெலின் தலைமையிலும் மன்னாரிலிருந்து ஒரு படையணி கப்டன் வொன்றிபேக் தலைமையிலும் வன்னியை நோக்கி நகர்ந்தன. கற்சிலை மடுவில் பண்டாரவன்னியனைய்யும் அவனது வீரர்களையும் கப்டன் வொன்றிபேக்கின் படை சந்தித்தது. போர் மூண்டது. பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டமையால் கரந்துறைந்தான்.

கப்டன் வொன்டிறிபேக்கிற்குப் பண்டார வன்னியனைக் கைது செய்யவோ, சாகடிக்கவோ முடியாது போனது. அவன் தனக்கு முன்னர் ஏற்பட்ட அவமானத்தைப் போக்க விரும்பி, கற்சிலை மடுவில் நடுகல் ஒன்றை நாட்டுவித்தான். அதில் 1803 அக்டோபர் 31 இல் இங்கு கப்டன் வொன் டிறிபேக் பண்டாரவன்னியனதைத் தோற்கடித்தான் எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

1811 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பண்டாரவன்னியன் கண்டி மன்னனின் உதவியுடன் உடையாவூரில் ஆங்கிலேயரைத் தாக்கினான். இவ்வாறான தாக்குதல் நிகழவுள்ளதென்பதை முன்கூட்டியே ஒற்றறிந்த ஆங்கிலேயர் யாழ்ப்பாணத்திலிருந்தும் திருகோணமலையிலிருந்தும் படையினரைக் குவித்திருந்தனர். அதனால் பண்டாரவன்னியனின் படை அழிவையும் பண்டாரவன்னியன் கடுங்காயங்களுக்கும் உள்ளாக நேர்ந்தது.

இவனை இவனது வீரர்கள் பனங்காமத்திற்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளித்து காப்பாற்ற முயன்றனர் . முடியவில்லை. அங்கு பண்டாரவன்னியன் என்ற சுதந்திர வன்னி வீரன் மரணமடைந்தான்.




### நல்லூர் கந்தசுவாமி ஆலயம்

### ஆதாரவுரை

யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றிற்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தலவரலாற்றிற்கும் நெருங்கிய பிணைப்புள்ளது. யாழ்ப்பாண நகர், நல்லூர்க் கந்தசுவாமி கோவில் என்பன அமைக்கப்பட்ட காலம், அமைத்தவர் பெயர் என்பன குறித்து யாவரும் ஆதாரமதாகக் கொள்ளும் பாடல் ஒன்று யாழ்ப்பாண வர்லாற்றின் இலக்கிய ஆதாரங்களில் ஒன்றாகக் கொள்ளப்படும் கைலாயமாலையின் முடிவில் தனிப்பாடலாக வந்துள்ளது.

'இலகிய சாகாத்த மெண்ணூற்
றெழுபதா மாண்டதெல்லை
அலர் பொலி மாலை மார்பனாம்
புவனேகபாகு
நலமிகும் யாழ்ப்பாண நகரி
கட்டுவித்து நல்லைக்
குலவிய கந்தவேட்குக் கோயிலும்
புரிவித்தானே'

இத்தனிப்பாடலிலிருந்து இரு விபரங்கள் புலனாகின்றன. ஒன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டியவர் புவனேகபாகு என்ற பெயர் பூண்டவர். மற்றையது, அக்கோயில் சக வருடம் எண்ணூற்றெழுபதாம் ஆண்டில் கட்டப்பட்டது.



நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டியவர் புவனேகபாகு என்பதற்கு இன்னோர் ஆதாரம், ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலில் காணப்படும் விசுவநாத சாஸ்திரியார் சம்பவக் குறிப்பு ஆகும்.

அது வருமாறு:

இலகிய சகாத்த மெண்ணூற்
றெழுபதாமாண்டதெல்லை
அலர்திரி சங்கபோதியாம்
புவனேகவாகு
நலமுறும் யாழ்ப்பாணத்து நகரி
கட்டுவித்துக்
குலவிய கந்தனார்க்குக்
கோயிலொன்றமைப்பித்தானே'

இச்செய்யுள் கைலாயமாலையில் வரும் தனிச்செய்யுளின் அப்பட்டமான பிரதி. திரிசங்க போதி புவனேகபாகு கோயிலை அமைப்பித்தவரென அறிந்த விஸ்வநாத சாஸ்திரிகிள் கைலாயமாலைத் தனிச் செய்யுளில் மாற்றமுண்டாக்கி யாத்துள்ளார். எவ்வாறாயினும் புவனேகபாகு என்பவரே நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டிய பெருமகன் என்பதில் பாடபேதமில்லை. இன்னோர் ஆதாரமும் இதனை உறுதிப்படுத்தும். நல்லூர் கந்தசுவாமி கோயிற் கட்டியமே அதுவாகும்.

'சிறீமான் மஹாராஜாதிராஜ
அகண்ட பூமண்டலப்ர
தியதிகந்தர விச்றாந்த கீர்த்தி
சிறீ கஜவல்லி மகாவல்லி
சமேத சுப்பிரமண்ய
பாதார விந்த ஜநாதிருட சோடக
மகாதான சூர்யகுல
வம்சோத்பவ சிறீசங்க
போதி புவனேகபாகு'

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டிய புவனேகபாகு இவ்வாறு கோயில் கட்டியத்தில் இன்றும் போற்றப்படுகிறார். இக்கட்டியத்தின் அர்த்தம் வருமாறு:

'திருவருட்சக்திகளான தெய்வயானை யம்மனும் வள்ளியம்மனும் ஒருங்கே பொருந்த வீற்றிருக்கும் சுப்பிரமணியப் பெருமானின் திருவடித்தாமரைகளை வணங்குபவனும் மன்னர்களுள் மன்னனும்செல்வங்களுடையவனும் மிகப் பரந்த பூமியடங்கலுமுள்ள திசைகள் எல்லாவற்றிலும் பரவிய புகழையுடையவனும் மக்களுடைய தலைவனும் முதலாம் பெரிய தானங்களைச் செய்பவனும் சூரிய குலத்திலே தோன்றியவனும் சிறீசங்கபோதி என்னும் விருதுப் பெயர் தரித்தவனுமான புவனேகபாகு.

எனவே கையலாயமாலை கூறும் , 'அலர்பொலி மாலை மார்பன் புவனேகபாகு'வும் விஸ்வநாத சாஸ்திரியின் சம்பவக் குறிப்புக்கூறும் , 'திரிசங்கபோதி புவனேகபாகு'வும் கோயில் கட்டியம் கூறும் ' சிறீ சங்கபோதி புவனேகவாகு'வும் ஒருவரா என்ற வினா எழுகின்றது. பின்னர் இருவரும் ஒருவரே என்பதில் வரலாற்றறிஞர்களிடையே பேதமில்லை.

(தொடரும்)

-செங்கை ஆழியான்-

படிப்பகம்